17.09.2025 Mcop.298/2023 ம.சா.1 கிருஷ்ணம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த மனு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் அப்பா விபத்தில் இறந்து விட்டதால் இழப்பீடு கேட்டு இம்மனு தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பாவிற்கு கடந்த 15.5.2021ல் விபத்து ஏற்பட்டது. விபத்து எந்த இடத்தில், எந்த நேரத்தில் ஏற்பட்டது என்றால் என் அப்பா காலை 5மணிக்கு வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சாம்பவர்வடகரை டு பொய்கை சாலையில் சென்று கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டது. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் என் அப்பாவிற்கு காலில் மட்டும் அடிபட்டது என்றால் சரியல்ல. உடம்பு முழுவதும் அடிபட்டது. தோள்பட்டை, முதுகு, கை, கால்களில் அடிபட்டு சுயநினைவு இல்லாமல் இருந்தார். என் அப்பாவிற்கு அடிபட்டவுடன் தென்காசி அரசு மருத்துவமனையில் தான் சேர்த்தோம் என்றால் சரிதான். காவல்துறை விசாரித்த போது என் அப்பா சுயநினைவுடன் இருந்து விபரங்கள் கூறினாரா என்றால் இல்லை. என் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக நானும், என் கணவரும் புகார் கொடுத்தோம். காவல்துறையினர் புகார் கொடுத்த பிறகு என்னிடம் தான் விசாரித்தார்கள். முதல் தகவல் அறிக்கை என் அப்பாவை நேரடியாக விசாரித்து பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை. 16.5.2021ம் தேதி தென்காசி மருத்துவமனையில் இருந்து திருநெல்வேலி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அதன்பிறகு 24.5.2021ம் தேதி என் அப்பா சிகிச்சை முடிந்து வெளியே வந்தார். என் அப்பா 9.9.22ல் இறந்து விட்டார். என் அப்பா சைக்கிளில் சென்று திடீரென சைக்கிளை நிறுத்தியதால் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் மோதிவிட்டார் என்றால்

சரியல்ல. இதனால் இருசக்கர வாகனத்தை ஒட்டி வந்த நபருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் தெரியாது. 1ம்எதிர்மனுதாரர் 15.5.2021ம் தேதி சுயநினைவு இல்லாமல் தென்காசி மருத்துவமனையில் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார் என்றால் தெரியாது. 1ம்எதிர்மனுதாருக்கு இரண்டு கால்களிலும் காயம் ஏற்பட்டு நடக்கமுடியாமல் இருந்து வருகிறார் என்றால் தெரியாது. என் அப்பா இறக்கும் போது 67 வயது இருக்கும். முதல் தகவல் அறிக்கையில் என் அப்பாவின் வயது 70 என சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. என் அப்பாவிற்கு நுரையீரலில் பிரச்சனை இருந்தது என்றால் விபத்திற்கு பிறகு பிரச்சனை ஏற்பட்டது. விபத்தில் என் அப்பாவிற்கு நுரையீரல் மற்றும் வயிற்றிலும் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா விபத்து ஏற்பட்டு 2 வருடம் கழித்து தான் இறந்து விட்டார் என்றால் சரியல்ல. 4 மாதங்களில் இறந்து விட்டார். விபத்திற்கு முன்பே எனது அப்பாவிற்கு நுரையீரலில் பிரச்சனை இருந்தது என்றும், அதன்பிறகு சிகிச்சைக்கு பிறகுஇறந்து விட்டார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் கவனத்துடன் வாகனத்தை ஒட்டிவந்தார் என்றும், என் அப்பா திடீரென சைக்கிளை நிறுத்தியதால் மட்டுமே விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கும், என் அப்பா இறந்ததற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1ம்எதிர்மனுதாரர் எனக்கு எவ்வித இழப்பீடு தொகையும் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,

கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.